Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# கீர்த்தனை நாடகங்களில் தமிழிசை உறுபடிகளின் பங்களிப்பு

சுரேஷ்குமார் டென்சி ( Sureshkumar Denshi )
MA Veena , RLV College
Pothipprambil House,Thekkumbhagam , Tripunithura, Ernakulam
Kerala, 682303
denshi1995@gmail.com

10

**ஆய்வு முன்மொழிவு**

**ஆய்வு சுருக்கம்**

கலைகளின் அரசி என அழைக்கப்படுவது நாடகமாகும்.தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. இவற்றுள் நாடகம் தொன்மையும், தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும். இயலும் இசையும் கலந்து கதையைத் தழுவி நடித்துக்காட்டப்படுவது நாடகமாகும். எட்டு வகையான உணர்ச்சிகளை ஒருவர் தம் மெய்ப்பாடு தோன்ற நடிப்பது நாடகத்தின் தனிச்சிறப்பாகும். தெருக்கூத்துகளாக இருந்து மேடைநாடகங்களாக மாறி இலக்கிய நாடகங்களாக மலர்ச்சி பெற்றுள்ளது.

அத்தோடு இசையானது பாமர மக்களிடம் நாடகம் எப்போது வளரத் தொடங்கியதோ அது முதல் தமிழிசையோடு கூடிய இசையானது வளர்ச்சி அடைந்து கொண்டு வந்துள்ளது . இதில் முக்கியமாக சிலப்பதிகாரங்களில் கூறும் இசை வடிவங்களும் மற்றும் தமிழிசையின் வளர்ச்சி இவற்றுக்கு சிறந்த ஆதாரங்களாக அமைகின்றன. உதாரணமாக கூத்து இசையில் முகவீனை என்பது மிக முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றன கூறலாம்.

எனவே காலந்தோறும் இசை எனும் நாடகமொழி, நாடக உருமாற்றத்திற்கேற்ப தன்னையும் தன் உருவையும் மாற்றிக் கொண்டு புதிய அழகியலாய் கீர்த்தனை நாடகங்களாக பரிணாமித்துக்கொண்டு எவ்வாறு பிரதீபலிக்கின்றன மற்றும் எவ்வாறு பங்களிப்பு செய்துள்ளன என்பதை பற்றிய ஆய்வாகவே இவ் ஆய்வு காணப்படுகின்றது

**திறவுச்சொல்:** கீர்த்தனை நாடகங்கள் ,தமிழிசை , இராமநாடாக கீர்த்தனை நந்தனார் சரித்திர கீர்த்தனை, நாடக இசை

**ஆய்வுப் பிரச்சனை**

தொன்மையான தமிழ் நாடக போக்கில் கீர்த்தனை நாடகங்கள் சிறப்பு பெறுகின்றன. இவற்றில் சீர்காழி அருணாச்சலக் கவிராயரின் இராம நாடக கீர்த்தனை மற்றும் கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திர கீர்த்தனையும் மிக முக்கியமானவைகளாகும் . கீர்த்தனை நாடகங்களில் இசையானது எவ்வாறான பங்கிணையும் வகிக்கின்றது ? நாடகத்தின் தன்மையை வெளிப்படுத்த இசை ஒரு ஊடகமாக அமைகின்றதா ? பண்டைய காலகட்டங்களில் நாடகத்தோடு இசை எவ்வாறு பங்களிப்பு செய்தது என்பதை அறிவதே ஆய்வின் பிரச்சனையாகும்.

**ஆய்வின் நோக்கம்**

கீர்த்தனை நாடகங்களில் தன்மை எவ்வாறு உள்ளது குறிப்பாக அதில் காணப்படும் இசை உருப்படிகளில் போக்கு எவ்வாறு உள்ளது எனவும் அறிந்து இதில் இராமநாடக கீர்த்தனை மற்றும்

நந்தனார் சரித்திர கீர்த்தனைகளில் சிறப்புகளை வெளிக் கொண்டு வருதலே ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் கருதுகோள்**

கூத்தில் இருந்து பிறந்தது எல்லா நாடகங்களும் அவை காலப்போக்கில் இசையோடு கலந்து இசை நாடகங்களாகவும் , நாட்டிய நாடகங்களாகவும் உறுப்பெற்றதோடு அவற்றுக்கு இசையானது மிக முக்கிய பங்கினை வகித்துள்ளதோடு அனேக தமிழிசை உருப்படிகளும் நாடகப் போக்குடன் ஒன்றிணைந்துள்ளது என்பது ஆய்வின் கருதுக்கோளாக அமைகின்றது.

**ஆய்வு முறையியல்**

வரலாற்று ஆய்வு மற்றும் ஒப்பீட்டாய்வு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வு மூலங்கள்**

முதல்நிலை தரவுகளாக புத்தகங்கள், அறிக்கைகள், சஞ்சிகைகள் போன்றவற்றைக் கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கீர்த்தனை நாடகங்களில் தமிழிசை உருப்படிகளின் பங்களிப்பு**

தமிழ் மொழியானது முத்தமிழ் என்று அழைக்கப்படும் பெருமை உடையது அவை இயற்றுத் தமிழ் இசைத் தமிழ் நாடகத் தமிழ் என்பவனாகும். தமிழில் இயல் இசை நாடகம் என்று முத்தமிழாக வகைப்படுத்தி சிறப்பான நிலையில் இன்றும் காணப்படுகின்றது . நடிக்கும் நாடகத்திற்கு கையாளப்படும் செயல்களும் இசை பாடல்களும் உரையாடல்களும் மிக முக்கியமான ஒன்றாக அமைக்கப்பெற்றிருந்தது .

அந்தவகையில் ஆடல் ,பாடல் இவைகளே பன்னெடுங்காலமாக நாடகம் என அறியப்பட்டு வந்திருக்கின்றன. மனித வாழ்க்கையில் ஆடலும், பாடலும் சிறப்பான இடத்தை வகிக்கின்றன. அசைவுகளும், ஓசைகளும் காலம் காலமாக மனிதனோடு கூடவே வளர்ச்சிப் பெற்றுள்ளது. வளர்ச்சிப் போக்கில் ஆடல், பாடலுடன் கதையைச் சொல்வது என்கின்ற நிலையில் நாடகம் தோன்றுகிறது. குழுச்சமூகங்கள் நிலவிவந்த ஒரு காலகட்டத்தில் இவை குழுச் செயல்பாடாகவும் குழுவின் அடையாளத்தைப் பேணவும் ஒரு கலாச்சாரப் பகிர்தலுக்கான தளமாகவும் பயன்பட்டிருக்கின்றன. ( மது . ச. விமலானந்தம் – தமிழ் இலக்கிய வரலாறு- பக் – 282 )

தமிழ் நாடக வரலாற்றைப் பொறுத்தவரை பதினாறு பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகள் குறிப்பிடத்தக்க காலக்கட்டங்களாகும். பதினாறு பதினேழாம் நூற்றாண்டிலிருந்துதான் நாடக இலக்கியங்கள் எழுத்து வடிவில் கிடைத்துள்ளன. அடுத்த படியாக நாட்டுப்புற நிகழ்த்து கலைகளான பள்ளு, குறவஞ்சி , நொண்டி நாடகம், குளுவ நாடகம், மகுட நாடகம், கீர்த்தனை போன்ற நாடக வகைகள் வளர்ச்சி பெற்றன. இதனை தொடர்ந்து இசை நாடகங்கள் முக்கிய இடத்தில் வந்து விட்டன. முற்றிலும் இசை பாடல்களே நிரந்தரவாகவும் இடை இடையே சிறிது உரைநடை கலந்தனவாகவும் எழுதப்பட்ட நாடகங்கள் இசை நாடகங்கள் என்று அழைக்கப்பட்டன. குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் செவ்வியல் இசையும்இ நாட்டுப்புற இசையும் கொண்ட நாட்டிய நாடகமாக அமையும். முதற்பகுதி செவ்வியல் சார்பும்இ பிற்பகுதி நாட்டுப்புறச் சார்பும் நிறைந்ததாக அமையும். இவை ஆடலுக்கேற்ற தாள அமைதி உடையனவாய் அமையும். இதற்கேற்ற வகையில் பாடலின் சந்தமும் இசையின் மெட்டும் அமைந்து விளங்கும்.

**கீர்த்தனை நாடகங்கள்**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கிபி 18 ஆம் நூற்றாண்டு இறுதியிலும் 19 ஆம் நூற்றாண்டு முட்பகுதியிலும் கீர்த்தனைகளாகிய இசைப் பாடல்களால் நாடகக் கூறுகள் மிக்க நாடக கீர்த்தனைகள் இலக்கியங்கள் எழுதப்பட்டன. அவற்றின் கதைகள் பெரும்பாலும் இராமாயணம் பெரியபுராணம் போன்றவற்றிலிருந்து எடுத்து கொண்டவையாக அமைந்தது. கீர்த்தனை என்பது புகழ்ந்து பாடுதலைக் குறிக்கும். சிந்து என்ற பாடல் வகையே தமிழில் கீர்த்தனைகளாக வளர்ச்சி பெற்றது என்பர். கீர்த்தனை நாடகங்கள் புராணக் கதைகளை கருவாக்ககொண்டு அமைந்தன. ஒரு புராண கதையோ அல்லது சமூக கதையோ இசை உறுப்புகளின் மூலம் பாடி அதே நேரம் நாடகமாக்கி நடித்துக் காட்டுவது இசை நாடகமாகும். கீர்த்தனை நாடகம் பெரிதும் இசை பாடல்களால் ஆனதால் அவையும் இசை நாடக வகைகளாகும். கீர்த்தனை நாடகங்கள் விருத்தம், தரு ,தபதை போன்ற பல இசை கூறுகளை கொண்டு காணப்படும். அவற்றை வகைகளாக நோக்கினோமானால்.

**தரு**

தரு என்பது கூத்து பாடல்களை பாடும் முறையை அமைத்துக் காட்டும் ஒருவித சொற்கோவையே ஆகும். தருவில் ராகம் சரணம் என்று அமைப்புகளை கொண்டிருக்கும். பல சரணங்கள் இடம்பெறுவது உண்டு. ஒரு கதையோ ஒரு நிகழ்ச்சியையோ விவரித்து சொல்லும் போக்கு தரு என்று சொல்லப்படும். இதை இசை நாடகங்களிலும் நாட்டிய நாடகங்களிலும் காணலாம். உதாரணம் அருணாச்சல கவிராயரின் இராம நாடகத்தில் தரு அதிகமாக இடம் பெற்றுள்ளது. இதுவும் ஒரு வகையான இசை உருப்படியாகவே காணப்படுகின்றது. சில சமயங்களில் ஜதிகளும் விருத்தங்களும் ஆங்காங்கே இடம்பெறுவதுண்டு.( மு. அருணாசலம் – தமிழ் இசை இலக்கிய வரலாறு – பக் -196 )

தருவில் பல வகைகள் உண்டு.பிரவேசிகை தரு, வருணனை தரு,மேலும் சம்வாத் தரு சுவாகா தரு ,உத்தர பிரதி உத்தர ஜக்கனி தரு, கோணங்கித்தரு, கோலாட்ட தரு , மங்கள தரு என்றும் பல தரு வகைகளை காணலாம்

**விருத்தம்**

விருத்தம் என்பது தாளமின்றி கவிதையின் வார்த்தைகளை இசைக்கூட்டி நீட்டிபாடும் தன்மை பெற்றது விருத்தமாகும். தேவார இசை முறையில் இதை சுத்தங்கம் என்று சொல்லப்படுகின்றது. வடமொழியில் இது ஸ்லோகம் என்றும் தெலுங்கில் பத்யம் என்று அழைக்கப்படுகின்றது .( மா . ராஜீ – தென்னிந்திய மரபு இசை இயல் – பக் – 299)

**திபத்தை**

என்பது ஒரு வகை கீர்த்தனையாகும் இதன் மூலம் நாடகத்தில் நீண்ட உரையாடலை அமைக்க முடியும் இதில் எடுப்பு தொடுப்பு முடிப்பு என்ற நிலைகள் இடம்பெறாமல் கன்னி பாடல்கலாகவும் அமையும். மேலும் கற்க, காண்டகம், நொண்டி சிந்தி, இலாவனி , கன்னி , கும்மி தூக்கடா, ஆனந்த களிப்பு ,அகவல் முதலிய பாடல் வகைகளும் காணப்படும்.

அவ்வாறே கீர்த்தனை நாடகங்களில் அடுத்து முக்கியமான நாடகங்களாக நந்தனார் சரித்திர கீர்த்தனைகள் மற்றும் இராம நாடக கீர்த்தனைகளை குறிப்பிடலாம் .

**1. இராம நாடக கீர்த்தனைகள்**

அருணாசல கவிராயர் (1711-1774) என்பவர் சீர்காழியிலே வாழ்ந்து கர்நாடக இசையில் பல இசை பாட்டுகளை இயற்றியும் பாடியும் பெரும் புகழ் பரப்பியவராவார். இவர் இயற்றிய அநேக உருப்படி தமிழ் மொழியே ஆகும். சீர்காழியில் வாழ்ந்ததால் சீர்காழிஅருணாச்சல கவிராயர் என்று அழைக்கப்பட்டார். பல நூல்களையும் இயற்றினார் . இவர் படைப்புகளில் இராம நாடக

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கீர்த்தனை முக்கியமான நாடக நூலாக மாறியது . இவர் 16 இடங்களில் இந் நூலை நாடகம் என்று சொல்லியிறுகின்றார். மேலும் உனதாசையாலே நாடகமாக செய்தேன் என நூலின் ஒரு பகுதியில் கூறுகின்றார். அத்தோடு இந் நூற் பெருமை கூறுகின்ற போது **நாடகம் என்றே சொல்லுவேன்** என்று கூறுகிறார். பாத்திரப்படைப்பு கதை பின்னல் கதைக்கூடல் ஆகியவற்றை நாடகம் போன்று சிறப்பாக வடிவமைத்துள்ளார் இந் நூல் இசை பாடல்கள் மற்றும் இனிய ராகங்களில் ஒரு இசை நாடக நூலாக இராம நாடக கீர்த்தனையும் அமைகிறது.( . https://www.tamildigitallibrary.in ) அருணாசல கவிராயர் 258 இசை பாடல்கலாக இராமாயண கதையை நாடக வடிவில் வடிவமைத்தார். கீர்த்தனைகளால் தமிழில் முதன் முதலில் இசை நாடகம் படைத்தார். ஒரு கதையை சுவையாக மக்களுக்கு சொல்வதற்கு கீர்த்தனைகள் ஏற்றன என்பதை காண்பித்தார். இவரின் முதல் இராம நாடக கீர்த்தனை திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் அரங்கேறியது.

இன் நூலின் அமைப்பும் சிறப்பம்சத்தினை நோக்கினோமானால் இராம நாடக கீர்த்தனைகள் 268 இசை பாடல்களின் தொகுப்பாகும். அவற்றுள் 60 தரு என்ற கீர்த்தனை வகை பாடல்கள் மற்றும் 197 திபதை , 60 அடி கண்ணிகளால் ஆன பாடல்கள், 59 தோடையாம் எனப்படும் நான்கடிக்கொண்ட விருத்தப் பாடல்கள், ஆறு கடவுள் வாழ்த்து பாடல்கள் என பல இசை வடிவங்கள் இதில் இடம் பெற்றுள்ளது. ( கு. சா . கருஷ்கணமூர்த்தி – தமிழ் நாடக வரலாறு – பக் -268 )

இந்த நூலானது பாயிரம், அயோத்தி காண்டம், ஆரண்ய காண்டம் ,கிஸ்கிந்தா காண்டம் ,சுந்தரகாண்டம், யுத்த காண்டம் என பல பகுதிகளைக் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நூல் கதாகாலசேபத்துக்கு என்றே எழுந்த முதல் இசை நாடக நூலாக போற்றப்படுகின்றது. இந்நூல் ஆசிரியர் 40 ராகங்களை பயன்படுத்துகின்றார் அவற்றுள் அசாவேரி கல்யாணி, சாவேரி, தோடி, மத்தியமாவதி ஆகியவை 15 முதல் 20 தடவைகள் வருகின்றன. அத்தோடு கூட ஆனந்த பைரவி, சங்கராபரணம், புன்னகவராளி, பைரவி போன்ற ராகங்கள் 10 முதல் 13 தடவைகள் பாடப்படுகின்றது. மற்றும் கமாஸ், காபி , நாட்டை குறிஞ்சி போன்ற ராகங்கள் ஒவ்வொரு தடவையும் துவிதாவஞ்சி, சைந்தவி போன்ற அபூர்வ ராகங்கள் அபூர்வமாகவும் காணப்படுகின்றது. ( மு. அருணாசலம் – தமிழ் இசை இலக்கிய வரலாறு – பக் – 296)

இதில் தாளங்கள் ஆதித்தாலும் 146 பாடல்களும் அடதாளம் 78 பாடல்களும் ஏனைய தாளங்கள் ஏழுக்கும் மிகக் குறைவாகவும் அமையப்பட்டிருக்கின்றது. இவ் இராம நாடகத்தில் காணப்படும் தனி சிறப்பினை நோக்கினால் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றால் போல் இராகத்தில் இசையை அமைத்திருப்பதை காணலாம். சந்தர்ப்பங்களின் கருத்தை மனதில் அமைத்து பாடல்களை செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. அனுமன் சீதையை பார்த்துவிட்டு வந்து மிக்க ஏக்கத்தோடு இருக்கின்ற ராமன் முன்பு கண்டேன் சீதையை என்று கூவி கூவி மகிழ்ந்தான் .அனுமான் வந்து மகிழ்ச்சியுடனே அனுமான் வந்து குதிக் கொண்டானே என்ற விருத்தம் முடிந்தது. **கண்டேன் கண்டேன் சீதையை கண்டேன் ராகவா என** முகாரி ராகத்தில் தொடங்குகின்றார். சீதையை காணாது காத்திருந்த ராமனுக்கு கண்டேன் என்ற வார்த்தை தேன் போல் காதுகளில் பாய்ந்திருக்கும். இதனை உணர்வுபூர்வமாக நூலில் பாடல்களின் மூலம் அமைததுக் கொடுத்துள்ளார். அத்தோடு சிறந்த இலக்கிய கருத்தாவாகவும் ஒப்பற்ற தமிழ் இசைநாடகமாகவும் இராம நாடகம் அமைந்திருக்கின்றது. (https://www.tamivu.og.courses/degree)

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**நந்தனார் சரித்திர கீர்த்தனைகள்**

தமிழோடு இணைந்து இறைவனை இசையால் பாடி போற்றிய இசை ஆசிரியர்கள் வரிசையில் கோபாலகிருஷ்ண பாரதியார் மிகவும் ஆற்றலுக்குரியவர். இவர் தமிழ் மொழி கீர்த்தனைகளை இயற்றி தமிழிசை வரலாற்றில் முத்திரையை பதித்தவர் .இவர் சில சிதம்பரநாதரைப் போற்றி பல பாடல்களை இயற்றி இருப்பினும் இவரால் இயற்றப்பட்ட நந்தனார் சரித்திர கதைகள் இசை உலகில் அழியாப் புகழும் இவரின் தனித்த அடையாளமாகவும் காணப்படுகின்றது. இத்தகைய நந்தனார் சரித்திர கீர்த்தனைகளில் சிறப்புகளை நோக்கினோமனால்இ

இவ் நாடக இசை மங்கல செய்யுள் கூறப்பட்டு கதை தொடங்கும். இசை பாடல்கள் இடை இடையே வசனம் என்ற அமைப்பும் உரைநடை பாங்கில் வருகின்றது. இவ்வாசன அமைப்பு கதையை இடையிலே கூறும் இசை பாடல்களும் வசனமும் விறுவிறுப்பாக கதை தொடர்ந்து செல்லும் .நந்தனார் சரித்திர கீர்த்தனை ஆனது முழுமையாக இசையோடு கலந்த ஓர் சிறப்பான நாடகமாக காணப்படுகின்றது

நந்தனார் சரித்திரம் என்பது தமிழ் இசை காவியம் ஆகும் இது திருநாளைப் போவோர் என்ற காரணப் பெயரால் போற்றப்படுகின்றது இது 63 நாயன்மார்களில் ஒருவராக போற்றப்படும் நந்தனார் வாழ்க்கையில் இறைவனோடு நிகழ்ந்ததாக சொல்லப்படும் சில அதிசய சம்பவங்களை இசை பாடல்களைக் கொண்ட விளக்க தொகுப்பாகவே கோபாலகிருஷ்ண பாரதியார் இதனை இயற்றியுள்ளார்

நந்தனார் சரித்திரத்தின் அமைப்பு கோபாலகிருஷ்ணன் பாரதி கதாகாலட்சேபம் செய்யும் வகையில் இச்சரித்தரத்தை உருவாக்கினார் பல இசை பாடல்களுடன் வசனப் பகுதியை இணைத்து மிகச் சிறப்பாக செய்துள்ளார். இவற்றில் காணப்படும் இசை பாடல்கள் கீர்த்தனை கற்கா , பெரிய கட்கா, ஸ்லோகம் , தேவாரம் , தரு ,அகராதி, நொண்டி சிந்து , கண்ணி தொடையம், மங்கலம், ஆனந்த களிப்பு, அலங்காரம், அகவல் , துக்கடா கலித்துறை, விருத்தம் ஆகியவற்றை கொண்டு சிறந்த ஒரு இசை அமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது .

நந்தனார் சரித்திர கீர்த்தனைகளில் காணப்படும் ராகங்கள் தற்பொழுது பாடப்பெற்று வரும் நந்தனார் சரித்திர கீர்த்தனைகளில் இடம்பெறும் ராகங்கலோடு சில மாற்றங்களை பெற்றுள்ளன. செஞ்சுருட்டி, ஆனந்த பைரவி, நாதநாமகிரியா ,கல்யாணி மோகனம், நாட்டை , கமாஸ், காம்போதி ,சங்கராபரணம், சாரங்கா, பூர்வி கல்யாணி, சஹானா , சாமா , கரகரப்பிரியா ,மாயமாளவகௌளை, பூரண சந்திரகா போன்ற பல ராகங்கள் காணப்படுகின்றன. கோபாலகிருஷ்ண பாரதி ஹிந்துஸ்தானி இசையிலும் தேர்ச்சிப் பெற்றிருந்தமையால் சில பாடல்களை இந்துஸ்தானி இராகங்களான அமீர் கல்யாணி போன்ற ராகங்களிலும் அமைத்துள்ளார். (சன்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ் – 130 ).நந்தனா சரித்திரத்தில் தாளங்களை நோக்கும் இடத்தில் கீர்த்தனையில் ஆதி ரூபகம் இ,சாப்பு ,ஏகம் போன்ற பல தாளங்களும் இதில் சந்தத்திடக்கு அமைவாக அமைக்கப்பட்டுள்ளன.

**தொகுப்புரை**

கீர்த்தனை நாடகங்கள் எவற்றையெல்லாம் முக்கிய படுத்துகின்றன என்று நோக்கும் போது அவற்றில் இசை அல்லது தமிழிசை மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. இசை கலந்த ஒரு கலையாக கீர்த்தனையை மக்களுக்கு வழங்கும் போது இசையின் மேல் மக்களுக்கு ஒரு ஈடுபாடு ஏற்படுவதுடன் சில கருத்துக்களும் அவர்களின் மனதில் இடம் பெற வழி ஏற்படுகின்றது

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

உதாரணமாக இராம நாடக கீர்த்தனைகளை பொறுத்தவரையில் அது காப்பிய கதையை எளிய வடிவில் மக்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறது. எனவே கீர்த்தனையில் கதைகளுக்கும் அறக்கருத்துக்களுக்குமே முதலிடம் பெற்றிருக்கின்றன. காப்பியங்களைப் படித்து புரிந்து கொள்ள இயலாத பாமர மக்களுக்கு உயர்ந்த கருத்துக்களை எளிதில் மனதில் கொள்ள துணை புரிந்துள்ளது அவ்வாறே நந்தனார் சரித்திர கீர்த்தனையில் அதன் ஆசிரியர் திட்டமிடப்பெற்ற கருத்துக்களை சமுதாயத்திற்கு முன்மொழிந்திருக்கிறார் . சில சமூக அவலங்களையும் அம்பலப்படுத்தி இருக்கிறார். இவை அனைத்துமே இசையாலான அமைப்புக்குளுடன் தமிழிசை கலந்த தமிழ் இலக்கிய உறுப்புக்களுடனும் இவை அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பான விடயமாகும் .கீர்த்தனை நாடகங்களில் பொதுவாக கதைகள் ஒன்று போல அமையாது இசை உணர்வும் ராகங்களின் பங்களிப்பும் தாளங்களின் சந்த மாற்றமும் அவற்றின் தனித்துவத்தை பிரதிபலிக்கின்றது .
இவ்வகையில் இசையானது நாடகத்திற்கு ஒரு மொழியாக அமைகின்ற முக்கிய அம்சமாக காணப்படுகின்றது. இசை நாடகம் என்பது வேறு ,நாடக இசை என்பது வேறு, இசை நாடகம் என்னும் போது இசை அங்கு பிரதானமாகின்றது .இசை இன் வழியே நாடகம் கொண்டு செல்லப்பட வேண்டியதாய் இருக்கின்றது. நாடகம் அங்கு பிரதானம் பெற்று விடுகின்றது நாடகத்தை அனுபவிக்க இசை ஒரு பிரதான பங்கினை வழங்குகின்றது என்ற கருத்து இதன் மூலமாக தெளிவாகின்றது . இசை ,இசை உருப்படிகள் , கவிநயம், நாடகம் ,இவை அனைத்தும் கலந்து வெளிவரும் போது ஒரு முழுமையான கலை வடிவமாக இலக்கிய நாடகங்களும் , இலக்கிய இசை நாடகங்களும் கீர்த்தனை நாடகங்களும் மிக முக்கிய இடத்தினை பெற்றுக் கொள்கின்றன.

**துணைநூற் பட்டியல்**


1. பேராசிரியர் மது . ச. விமலானந்தம் – தமிழ் இலக்கிய வரலாறு – விஜயா பதிப்பகம் - 2019
2. மா . ராஜீ – தென்னிந்திய மரபு இசை இயல் – பரணி பதிப்பகம் – 2012
3. கு. சா . கருஷ்கணமூர்த்தி – தமிழ் நாடக வரலாறு - பூங்ககொடி பதிப்பகம் -1979
4. மு. அருணாசலம் – தமிழ் இசை இலக்கிய வரலாறு – கடவு பதிப்பகம் – 2009


**ஆய்விதழ்கள்**


1. முனைவர் கி. தினேஷ்குமார் - சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் தொகுதி1 – 2018


**இணையத்தளம்**


1. https://www.tamivu.og.courses/degree
2. https://www.tamildigitallibrary.in